www.padippakam.com

# நடிகர் ராஜ்குமார் கடத்தல் - வீரப்பன் கோரிக்கைகள் ஒரு கண்ணோட்டம் !

மகுடபதி
(கர்நாடக அரசு சான்று பெற்ற பத்திரிக்கையாளர்)

வெளியீடு
கர்நாடக தமிழர் இயக்கம்,
திருக்குறள் மன்றம்,
தாமோதர முதலியார் தெரு,
அலசூர், பெங்களூர் - 560 008,
கருநாடக மாநிலம்.

website : www.geocities.com/ktiyakkam
e-mail : karnatakatamils@hotmail.com

நன்கொடை : உருபா 5/-

SEELAN BOOK
SIGNATURE
NORWAY

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# நடிகர் ராஜ்குமார் கடத்தல் - வீரப்பன் கோரிக்கைகள் ஒரு கண்ணோட்டம் !

**வீரப்பன் தமிழன்**

சந்தன வீரப்பன் சூலை 30 ஆம் நாள் இரவு 9.30 மணிக்கு கன்னட நடிகர் ராஜ்குமாரையும், மற்றும் மூவரையும், காஜனூர் பங்களாவில் இருந்து பிணைக்கைதிகளாகப் பிடித்துச் சென்றார். அவர்களை விடுவிக்க வேண்டுமானால், முதல் தவணையாக பத்து கோரிக்கைகளையும், இரண்டாவது தவணையாக நான்கு கோரிக்கைகளையும், ஆக மொத்தம் 14 கோரிக்கைகளை கர்நாடக - தமிழ் நாடு அரசுகள் முன்பு வைத்துள்ளார். அனைத்து கோரிக்கைகளும் தனிப்பட்ட தனக்காக, அவர் கேட்க வில்லை; தமிழர்களின் பொது நலன் கருதியே கேட்கப் பட்டவைகளாக வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

140 கொலைகளையும், ஆயிரக்கணக் கான யானைகளையும் - சந்தன மரங்களையும் வெட்டிச் சாய்த்தக் கொடுமைக்காரன் வீரப்பன், தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வழி தேடாமல், பழுத்த அரசியல்வாதி போல அழுத்தமாகப் பேசலாமா ? அதற்காக அரசியல் தொடர்பே இல்லாத நடிகர் ராஜ்குமாரைக் கடத்திச் சென்று வைத்துக் கொண்டு பேரம் பேசலாமா ? இவ்வாறு வினா எழுப்பி விழி உயர்த்தி வியப்பவர்கள் சிலர்; விழி உருட்டி கனல் கக்குபவர்கள் பலர் !

இதுவரை கர்நாடகத்தை ஆண்ட ஆட்சியாளர்களும் சரி, காவல் துறையும் சரி, கன்னட மக்களும் சரி, வீரப்பனை ஒரு குற்றவாளி என்ற கண் கொண்டு மட்டும் பார்க்க வில்லை; தமிழன் என்ற ஒரே பார்வையோடு தான் சேற்றை வாரி இறைக்கின்றார்கள்; நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். தூற்றித் திரிகின்றார்கள் என்பதை மறந்து விட முடியாது. தூர நோக்கு உடையவர்கள், இதைத் துல்லியமாகப் புரிந்து, வைத்திருப்பார்கள். தன் மீது ஏவிய அத்தனை கொடுமைகளுக்கும், பழி வாங்கும் வாய்ப்புக் கிட்டி இருக்கும் இந்த சந்தர்ப்பத்திலும் கூட, எத்தனை மனித நேயத்துடன் நடிகர் ராஜ்குமாரையும் அவரது சகாக்களையும் நடத்தி வருகிறார். அது தான் தமிழன் பண்பாடு !

கர்நாடக எல்லைப் பகுதியில் உள்ள கோபிநத்தம் இவர் பிறந்த ஊர் கர்நாடக வாக்காளர் பட்டியலில் இவர் பெயர் இருந்தது. ஆகவே வீரப்பன் ஒரு கர்நாடகத் தமிழன்.

வேட்டைப் பிரியராக இருந்த வீரப்பனை கர்நாடக அரசியலில் பெரும்



படிப்பகம்

www.padippakam.com

தரும்படிக் கேட்டுக் கொண்டார்கள். தனக்கும், மலை கிராமத்தில் வாழும் தனது மக்களுக்கும் நிரந்தர வேலையும் போதிய வருமானமும் கிடைக்கும் என்பதால் இந்தத் தொழிலில் ஈடுபட்டார். அதே சமயம் பாளே கௌடா தலைமையில் அந்த கிராமத்தில் மற்றொரு கன்னட கும்பலும் இதே தொழில் செய்து வந்தது. சந்தன மரங்களை வெட்டி துண்டுகளாக்கி கடத்தல் செய்பவர்களின் லாரிகளில் ஏற்றி விடுவதோடு இவர்கள் வேலை முடிந்தது. லாரிகளில் சந்தனக் கட்டைகளை கடத்திச் சென்று, வெளி மாநிலங்களில் விற்பனை செய்வது கடத்தல் வணிகர்கள் தான். கூலியும் கமிஷனும்தான் இவர்களுக்கு மிச்சம் கன்னடக் கும்பலை விட, வீரப்பன் கும்பலுக்கு கிராக்கிகள் பெருகின கொழுத்த பணம் குவிந்தது. மலை கிராம மக்களுக்குத் தாராளமாக அள்ளிக் கொடுத்து உதவிகள் செய்தார். வனத் துறையினரும் காவல் துறையினரும் கைகட்டி நின்று மாமூல் வாங்கிச் சென்றனர். மலை கிராம மக்கள் இடையே செல்வாக்கு வளர்ந்தது. இது, போட்டி குழுவினருக்கு பொறாமையை ஏற்படுத்தியது. அரசியல் பெரும் புள்ளிகள் பலர் அவரது தயவை நாடினர்.

1977 - ல் சட்ட மன்றத் தேர்தல் ! காங்கிரஸ் கட்சியில் ராஜு கௌடா ஜனதாக் கட்சியின் சார்பில் நாகப்பா போட்டி இட்டனர். வீரப்பன் காங்கிரசுக்கு ஆதரவாக இருந்தார். ராஜு கௌடாவுக்கு நிதி உதவியுடன் கிராமம் கிராமமாகச் சென்று அவருக்கே வாக்களிக்கும் படியும் கேட்டுக் கொண்டார். போட்டி குழுவினர் நாகப்பாவை ஆதரித்தனர். அந்தத் தேர்தலில் ராஜு கௌடா பெரும் வெற்றி அடைந்தார். நாகப்பா படு தோல்வியைத் தழுவினார். இதனால் ஆத்திரமடைந்த நாகப்பாவும் கன்னட குழுவும் பழி வாங்கிடத் துடித்தது.

ராஜு கௌடாவும், தனது வெற்றிக்கு வீரப்பனே காரணம் என்று பாராட்டி நன்றி தெரிவித்தார். அப்போது வீரப்பன் ஒரு வேண்டுகோள் விடுத்தார். இருக்க இடமின்றி தவிக்கும், கிராம மக்களுக்கு வீடு கட்டித் தரும்படி கேட்டுக் கொண்டார். வேண்டுகோளை ஏற்று ராஜு கௌடவும், 100 தொகுப்பு வீடுகளைக் கட்டிக் கொடுத்தார். அந்த வீடுகளை முன்னாள் முதல்வர் குண்டுராவ் திறந்து வைத்தார்.

நாகப்பா குழுவினற்கு இது கண்ணை உறுத்தியது. ராஜு கௌடாவின் வளர்ச்சியை தடுக்க வேண்டுமானால், வீரப்பனை தீர்த்துக் கட்ட வேண்டும் என்று முடிவு செய்தனர். இனி அங்கிருந்தால், தன் உயிருக்கு ஆபத்து எனக் கருதி, குண்டல் பேட் காட்டுக்குச் சென்று தொழிலைத் தொடர்ந்தார்.

1983 தேர்தல் வந்தது, ஹாஜனூர் தொகுதியில் நாகப்பா மீண்டும் போட்டியிட்டு, வெற்றி பெற்றார். M.L.A. வான, நாகப்பா, பழி வாங்கும் எண்ணத்தை விட்டு விடவில்லை. வீரப்பனை ஏதாவது ஒரு குற்றத்தில் மாட்டி, கைது செய்து விட வேண்டும் என்று திட்ட மிட்டார். 1986 ல் குண்டல் பேட் காட்டில், ஒரு வனத் துறை ஊழியர் கொலையானார். அந்தக் கொலையை, வீரப்பனே செய்தான் என்று சோடனை செய்து பிடிப்பதற்குக் காவல் துறை வலை வீசித் தேடியது. பிடிக்க முடியவில்லை. வீரப்பன் தலை மறைவாகி, பெங்களூருக்கு வந்தார். மோப்பம் பிடித்த காவல் துறை, ஒரு விடுதியில் வைத்து



படிப்பகம்

www.padippakam.com

செவ்வாக்கு பெற்றிருந்த கடத்தல் புள்ளிகள் அனுகி சந்தன மரங்களை வெட்டித் கைது செய்தனர். எவ்வித விசாரணையும் இன்றி ஒரு பழைய பங்களாவில், வீட்டுக் காவலில் வைத்தனர். அப்போது பெங்களூரில் சார்க் மாநாடு ! விடுதலைப் புலிகள் பலர் கைது செய்யப் பட்டனர்.

எங்கும் போலீஸ் கெடுபிடி. இந்த பதட்ட நிலையில் வீரப்பனை, பெங்களூரில் வைத்திருப்பது உகர்ந்தது அல்ல, என்று காவல் துறை நினைத்தது டி.எப்.ஓ. சீனிவாசனிடம் ஒப்படைத்து, குண்டல் பேட்டிற்கு கொண்டு போக வைத்தனர். டி.எப்.ஓ. சீனிவாசன், சாம்ராஜ் நகர் சரகத்தில் உள்ள பூதி படுகா, என்ற இடத்தில் வீரப்பனை 2 நாட்கள் அடைத்து வைத்திருந்தான். நாகப்பா M.L.A. சீனிவாசனிடம் சுட்டுக் கொன்றுவிடு என்று தைரிய மூட்டினான். வீரப்பன் இவர்கள் சதியை, மோப்பம் பிடித்து தப்பி ஓடி விட்டார். அன்று தலைமறைமானவர் தான் வீரப்பன் ! கடந்த 14 ஆண்டுகளாக, கர்நாடக - தமிழ் நாடு அதிரடிப் படைகளும், எல்லை ராணுவப் படையும் அவரைப் பிடிப்பதற்கு தேடுதல் வேட்டை நடத்தியபடியே இருக்கிறது.

அகவே, கர்நாடகத்துக்கும் - கர்நாடக அரசியலுக்கும், கர்நாடகத் தமிழருக்கும் நீண்ட நெடிய தொடர்பும் - உறவும் உண்டு. இதை யாரும் ஒதுக்கித் தள்ளி விட முடியாது. அதனால், இரு அரசுகளுக்கும் அனுப்பி வைத்துள்ள ஒலி நாடாவில் தெரிவித்துள்ள கோரிக்கைகளிலும், ஒரு சில நியாயங்கள் இருக்கின்றன, நரஹந்தக (நரபலி வாங்குபவன்) - தந்த சூரா (தந்தங்களை சூறையிட்டவன் - கந்தம கதீமா (சந்தன மரக் கள்ளன்) என்று வீரப்பனைக் கொச்சப் படுத்துவதும், அவர் கோரிக்கைகள் நயவஞ்சகமானது - விபரீதமானதும் என்று அலட்சியப் படுத்துவதும் முட்டாள்தனம் என்பதை விளக்குவதே, இந்தக் கையேட்டின் நோக்கமாகும்.

<u>இது கன்னட நாடா ?</u>

நான்கு கோடி கன்னடர்களின், கன்னட நாடு என்று வெறி பிடித்த கன்னடனின் வீராவேசப் பேச்சுக்குப் பணிந்து, ஆமாம், இது கன்னட நாடு: நாம் இங்கு பிழைக்க வந்தவர்கள். நமக்கு என்ன உரிமை இங்கே இருக்கிறது ? என்று தொடை, நடுங்கி பேட்டி அளிக்கின்றவர்களும் - அறிக்கை விடுகிறவர்களும் மன நோயாளிகள் ! அவர்கள் - தமிழ் இலக்கியம் - தமிழக அரசியல் என்று பூசனை செய்து கொண்டு இருந்து விடுங்கள். கர்நாடகத் தமிழர் சிக்கலைப் பற்றி மூக்கை நுழைக்க வேண்டாம்.

கன்னடனின் வரலாற்றை அவன் எழுதுவதற்கு முன்பே, இங்கு தமிழன் தன் வரலாற்றை எழுதிவிட்டான் என்பதை இந்த குறைமதி படைத்த தமிழர்கள், முதலில் புரிந்து கொள்ள வேண்டும், தெரிந்து கொள்ள வேண்டும்.

4 கோடி கன்னடர்கள் வாழும் கன்னட நாடு அல்ல ! அல்லவே. அல்ல ! மராட்டியர் - தெலுங்கர் - தமிழர் - உருது இசுலாமியர் - கொங்கணி - துளு - கொடவர் - என பல மொழிகள் வழங்கும் கர்நாடக மாநிலம் ! 4 கோடி மக்கள்



படிப்பகம்

www.padippakam.com

குறைவே ! இந்த உண்மையை மறந்துக விட்டு, 4 கோடி மக்களும், கன்னடர் என்ற மாயையை வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள், மிரட்டிக் கொண்டிருக்கின்றார்கள். இதில் பெரிதும் பாதிக்கப் பட்டிருப்பவர்கள் 1 கோடி, கர்நாடகத் தமிழர்கள்தான்.

<u>சட்ட முன்னுரிமை :</u>

நமது அரசியல் சட்டத்தில், மொழி-மத சிறுபான்மை மக்கள் பாதுகாப்புக்கும் - தற்காப்புக்கும் பல (விதி) நெறி முறைகளை வகுத்துள்ளன. அவைகளைப் பார்ப்போம்.

(அ) சட்டப் பிரிவு 29 A

இந்திய மக்கள், இந்தியாவில் எந்தப் பகுதிக்குச் சென்று வாழ்ந்தாலும், அவர்கள் மொழி, கல்வி, பண்பாடு, பழக்க வழக்கம் ஆகியவைகளை மதித்து அப்பகுதியில் உள்ள அரசு, அந்த மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

(ஆ) சட்டப் பிரிவு - 30 A

மொழி - சமய சிறு பான்மை இனத்தவர் நடத்தும் கல்விக் கூடங்களுக்கு, அப்பகுதியில் உள்ள அரசு உதவி நல்கி, பாதுகாத்திடவேண்டும். மாற்றாந் தாய் மனப் பான்மையோடு நடந்து கொள்ள கூடாது.

(இ) சட்டப் பிரிவு - 30 B

மொழி - சமய அடிப்படையில் சிறுபான்மையாக இருப்பவர்கள், தங்கள் மொழியில் கல்வி - சமயப் பள்ளிகளை நிறுவிட முழு உரிமை உண்டு.

(ஈ) சட்டப் பிரிவு - 350 A

மொழிச் சிறுபான்மையினர் தங்கள் குழந்தைகளுக்கு, தங்கள் தாய் மொழியிலேயே கற்றுக் கொள்வதற்கு, அந்தந்த மாநில அரசுகள், மொழி சிறுபான்மையினருக்கு, வாய்ப்பும் - வசதியும் செய்து கொடுக்க வேண்டும்.

(உ) சட்டப் பிரிவு - 15 A

ஒரு மாநிலத்தில் 15 விழுக்காடு மொழி சிறுபான்மையினர் வாழ்ந்தால், அவர்களுக்கு, அந்த மாநில அரசு, ஆணைகளையும் - ஆவணங்களையும், அவர்கள் தாய்மொழியிலேயே வழங்க வேண்டும்.

<u>தமிழர் எதிர்ப்பு</u> :

மொழி சிறுபான்மையினருக்கு, இந்திய அரசியல் சட்டம் இவ்வளவு பாதுகாப்பும் - உரிமையும் வழங்கி இருந்தாலும், கடந்த 50 ஆண்டுகளாக, கர்நாடக அரசு அவைகளை மதித்ததே இல்லை. சிறுபான்மை மக்களுக்கு, ஒரு துரும்பைக் கூட தூக்கி வீசி நன்மை செய்தது இல்லை. சட்டத்தின் பக்கங்களைப் புறந்தள்ளி விட்டு, தமிழர்களை நசுக்குவதிலும் - ஒழித்துக்கட்டுவதிலும் கண்ணும் கருத்துமாக



படிப்பகம்

www.padippakam.com

வாழும் கர்நாடகத்தில் கன்னடர்கள் பெரும் பான்மை இனமல்ல ! 2 கோடிக்கும் இருக்கிறது.

கன்னட சலுவளி என்ற பெயரால், காங்கிரஸ் அரசுகள் வாட்டாள் நாகராஜையும், ஜனதா அரசுகள் நாராயண குமாரையும், ஆர். எஸ்.என். கௌடா, சிதானந்த மூர்த்தி, ராஜ்குமார் அபிமானிகள் சங்கத்தைச் சேர்ந்த சா.ரா.கோவிந்து, 'ஈ. சஞ்சை', வெங்கடேஷ் போன்றவர்களைக் கொம்பு சீவி விட்டன. கன்னட எழுத்தாளர்களும், கல்வியாளர்களும், சமூகத் தொண்டர்களும் இவர்களிடம் சோரம் போனார்கள் இதுவரை ஆட்சிக் கட்டிலில் இருந்த, கர்நாடக அரசுகள் அத்தனையும், தமிழர் வெறுப்பை, கன்னடர் இடையில் தூண்டிவிட்டு குளிர் காய்ந்து கொண்டிருக்கின்றன. தமிழர் வெறுப்புப் பயிர் செழித்து வளர்ந்திட, நீர் பாய்ச்சுகின்றன: உரமிட்டு வருகின்றன. தமிழர்கள் தாக்குதலுக்கு உள்ளாகும் போது எல்லாம், கர்நாடக காவல் துறை கை கட்டி நின்று வேடிக்கை பார்க்கும் இது வாடிக்கை.

கன்னடர் போராட்டங்கள் :

தமிழர்களுக்கு எதிராக, வெறிபிடித்த கன்னட துரோகிகள் நடத்திய போராட்டங்கள் - தாக்குதல்கள் - அடக்கு முறை அட்டூழியங்களை விவரித்தால் கல் நெஞ்சும் கருகும் ! அவைகளைப் பற்றிய விரிவஞ்சி, ஒரு சிறு பட்டியலை மட்டும் இங்கே தருகிறோம்.

- சங்கீதக் கச்சேரியில் தமிழ் கீர்த்தனைகள் □ பாடல்கள் பாடியதால் கல் லெறிந்து, கலவரம் செய்தார்கள்.

- தமிழ்த் திரைப் படம் வெளியிடும் கொட்டகைகளைத் தாக்கினார்கள். கன்னடப் பகுதியான மெஜஸ்டிக்கில் தமிழ் திரைப் படங்களை வெளியிடக்கூடாது என்று தடை செய்து விட்டார்கள். தமிழ் திரைப் படச் சுருளைத் தீ யிட்டுக் கொளுத்தினார்கள் தமிழ் நாட்டில் வெளியாகி 3 மாதங்களுக்கு பின், அப்புறம் 6 கிழமைகளுக்குப் பின்பு தான் பெங்களூரில் திரை யிட வேண்டும் என்று கட்டுப்பாடு விதித்தார்கள். தமிழ் படங்கள், 100 நாட்கள் ஓடக் கூடாது: 50 நாட்களோ - அல்லது 14வது வாரத்திலோ, கொட்டகைகளில் இருந்து தூக்கிட வேண்டும் என்று மிரட்டுகிறார்கள். கன்னடப் படங்களுக்கு மட்டும் கேளிக்கை, வரிச் சலுகை: தமிழ் படங்களுக்கு நூறு விழாக்காடு வரி விதிப்பு ! தமிழ் திரைப் படங்கள் திரையிடும் கொட்டகைகள், ஆண்டுக்கு மூன்று மாதம், கண்டிப்பாகக் கன்னடப் படங்களை திரையிட்டே ஆக வேண்டும் என்று வலியுறுத்தல் செய்தார்கள். தமிழ் படங்களை, கன்னடத்தில் மொழி மாற்றம் செய்து வெளியிடக் கூடாது.

தமிழ் படங்களை நசுக்கவும், கன்னடப் படங்களை தமிழர் மீது திணிக்கவும், இத்தனை கட்டுப் பாடுகள் விதிப்பதற்கும், அடி யெடுத்துக் கொடுத்தவர் நடிகர் ராஜ்குமார் : தெருவில் இறங்கி போராடியவர்கள், ராஜ்குமார் அபிமானிகள் ! கன்னடத் திரை உலகமே, அவரது ஆதிக்கத்தில் தான் இருக்கிறது. அவருடைய



படிப்பகம்

www.padippakam.com

நடிகர் ராஜ்குமாரை மீட்க வேண்டும் என்று பதறித் துடிக்கும் நடிகர் ரஜினிகாந்த், கமலஹாசன், நடிகர் சங்கம், தயாரிப்பாளர் சங்கம் திரைப்பட வர்த்தக சபை, யாராவது இந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்டது உண்டா ?.

- 95 விழுக்காடு தமிழ் மக்கள் நிறைந்த கிறுத்தவ ஆலயங்களில், தமிழில் வழிபாடு நடத்தக் கூடாது. கன்னடத்தில் தான் வழிபாடு நடத்த வேண்டும், என்று கன்னட வெறியர்கள் கிளர்ச்சி நடத்துகின்றார்கள்.

- கர்நாடக அரசுப் பணிகளிலும் தொழிற் சாலைகளிலும் கன்னடர்களுக்கு மட்டுமே வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பது சரோஜினி மகிஷி அறிக்கை. அந்த அறிக்கையை கர்நாடக அரசும் அமல் படுத்த முனைப்புக்காட்டுகிறது. கர்நாடக அரசு தொழிற்சாலைகளான GEF, NGEF, VSL, MISL, KSRTC, HCD, MANDINI DAIRY, SUGAR FACTORY, SILK BOARD, VIKRANT TYRE, CEMENT FACTORY போன்ற வற்றிலும், HMT, HAL, BEL, BHMEL, ITI, NAL, T.V. RADIO, POSTAL & TELEGRAPH, AGO போன்ற நடுவண் அரசு துறைகளிலும் தமிழருக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடாது. காலியாகும் இடங்களை கன்னடர்களுக்கே அளிக்க வேண்டும் என்று கன்னட இயக்கத்தவர் மறியல் போராட்டம் நடத்துகின்றார்கள். தலைமை அஞ்சல் நிலையத்திற்குள் புகுந்த தமிழர்களை தாக்குகிறார்கள். ஓட ஓட விரட்டிச் சென்று உதைக்கிறார்கள். 515 கம்மோண்ட் பணி மனையில் அமர்த்தப்பட்ட தமிழர்களை சேர விடாது முற்றுகைப் போராட்டம் நடத்தினார்கள்.

- சென்ற 99ம் ஆண்டு A.G.O. அலுவலர்ளாக 26 தமிழர்களை, நடுவண் அரசு தேர்வு செய்தது. அவர்களைப் பணியில் சேர விடாது, கன்னட சலுவளி, கன்னட கிரியா கேந்திரா, ராஜ்குமார் அபிமானிகள், குறிப்பாக பி.ஜே.பி. யினரும் போராட்டம் நடத்தினார்கள். கட்டிடத்துக்குள் புகுந்து கண்ணாடி, ஜன்னல்களை உடைத்தார்கள். மேஜை - நாற்காலிகளைச் சேதப்படுத்தினார் 26 தமிழர்களும், பணியில் சேர முடியாது. திசை தெறிக்க ஓடி, ஒளிந்து கொண்டார்கள். இந்தப் போராட்டத்தில் M.L.A., M.P., மாநில - மத்திய அமைச்சர்கள் கட்சி பேதமின்றி பங்கேற்றார்கள். ஏறத் தாழ 40 நாட்கள் AGO வளாகத்திற்குள் அமர்ந்து கொண்டு மீண்டும் 26 தமிழர்கள் உள்ளே நுழைந்து விடக் கூடாது என்று ("தர்ணா") மறியல் செய்தார்கள். இந்த அநியாயத்தை எதிர்த்து ஒரு கன்னடன் கூட கண்டனம் செய்ய வில்லை.

<u>கர்நாடக தமிழர் இயக்கம் என்ற அமைப்புத்</u> தான், இந்த முறையற்ற செயலை வழக்கு மன்றத்துக்கு எடுத்துச் சென்று வாதாடியது. இந்த அரசோ, A.G.O. நிர்வாகமோ, காவல் துறையோ, ஆரப்பாட்டக் காரர்களை அமைதியாக ஆதரித்ததே தவிர, நடவடிக்கை எதுவுமே எடுக்கவில்லை. நாடாளு மன்றத்தில் இந்தப் பிரச்சினை எதிரொலித்த பின்பு அந்த 26 பேருக்கும் வேறு நடுவண் அரசு அலுவலகங்களில் வேலை கொடுக்கப் பட்டதே தவிர, A.G.O. வில் மீண்டும் வேலை கொடுக்க வில்லை.

- தமிழர்கள் பெரும்பாலும் பெங்களூரில் கூலி வேலை செய்பவர்கள்:



படிப்பகம்

www.padippakam.com

சொல்லுக்கு அடி பணிந்து, எவனும் வாய் திறக்க மாட்டான்.

குடிசைகளில் வாழ்பவர்கள். இந்தக் குடிசைகளினால் நகரின் அழகே கெட்டுப் போகிறதாம். ஆகவே குடிசைகளை ஒவ்வொன்றாக ஒழித்துக் கொண்டிருக்கிறார்கள். குடிசைவாசிகளுக்கு மாற்று இடம் கூட வழங்காது துரத்தி விடப் பட்ட நிகழ்ச்சிகளும் உண்டு.

● தமிழர்கள் வாழும் பகுதிகள் என்றால், அங்கு இந்த அரசும், மாநகராட்சியும் வளர்ச்சிப் பணிகளை செய்வது இல்லை: திட்டமிட்டே புறக்கணிப்புச் செய்யப் படுகிறது.

● துவக்கப் பள்ளிகளில் இருந்தே கன்னடம் மட்டுமே பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற கோகாக் அறிக்கை, 1982ல் வெளியிடப் பட்டது. எங்கும் கன்னடம் - எதிலும் கன்னடம், என்று முழக்க மிட்டு, கர்நாடகம் முழுதும் சூறாவளிச் சுற்றுப் பயணம் செய்து, <u>தமிழுக்கு எதிராகப் பரப்புரைச் செய்து, மொழிப் போராட்டம் நடத்தினார், நடிகர் ராஜ்குமார் !</u>

● தாய் மொழி தமிழுக்கு வேட்டு வைக்கும் கோகாக் அறிக்கையைத் திரும்பப் பெறு என்று தமிழர்கள், முதல் மொழிப் போரட்டம் நடத்திய போது தமிழர்களின் குடிசைகள் கொளுத்தப்பட்டன: தமிழ்நாட்டு வண்டிகள் அடித்து நொறுக்கப் பட்டன. வீடுகள் - தொழிற் கூடங்கள் சூறையாடப் பட்டன. பெண்கள் மான பங்கப் படுத்தப் பட்டனர். கன்னடர்கள் பேயாட்டம் போட்டனர். பெங்களூரிலும், தங்க வயலிலும் தமிழர்கள், கோகாக் அறிக்கையை எதிர்த்து ஊர்வலமும், ஆர்ப்பாட்டமும் நடத்தினர். அவர்கள் மீது காவலர் (POLICE) தடியடி நடத்தி கலைத்தும், கலைந்து செல்ல மறுத்ததால், துப்பாக்கி சூடு நடத்தியது. 1982 சூலைத் திங்கள் 5, 6, 7 மூன்று நாட்கள் நடந்த தமிழர்களின் வீரம் செறிந்த, இந்த போராட்டத்தில், கர்நாடக காவல் துறையின் காட்டு மிராண்டித்தனமான துப்பாக்கி சூட்டில் தங்க வயல் தங்கங்கள் மோகன், பால்ராஜ், உதயகுமார், பரமேசு என்ற நான்கு தமிழ் இளைஞர்களும், பெங்களூரில் இரண்டு கண்மணிகளும் நெஞ்சில் குண்டு பாய்ந்து வீர மரணம் அடைந்தார்கள்.

<u>எம்.ஜி.ஆருக்கு அவமானம் :</u>

கோகாக் மொழிப் போராட்டத்தை எம்.ஜி.ஆர். கடுமையாக எதிர்த்தார்: கண்டன அறிக்கை வெளியிட்டார். அந்த மொழிப் போரில், தங்கள் இன்னுயிர் ஈந்த தங்கத் தியாக மறவர்களுக்கு இழப்பீடு வழங்கி, அஞ்சலியும் செய்தார். இது கன்னட வெறியர்களுக்கு, குறிப்பாக ராஜ்குமார் அபிமானிகளுக்கு ஆத்திரத்தை மூட்டியது. எம்.ஜி.ஆரை, எப்படியும் வஞ்சம் தீர்த்துக் கொள்ளக் காத்திருந்தது.

1983 தேர்தல் அறிவித்த நேரம்: விவசாய சங்கத் தலைவர் நாராயணசாமி நாயுடு, பெங்களூர் ஜிண்டால் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்தார். எம்.ஜி.ஆர். தனது கூட்டணிக் கட்சிகளுக்கு வலிமைச் சேர்க்க விவசாய சங்கத்தின் ஆதரவைக் கேட்டு பெங்களூரில் தங்கி இருந்த நாராயணசாமி நாயுடுவை சந்திக்க



படிப்பகம்

www.padippakam.com

ெ□க்டேயை, அவர் வீட்டில் சந்தித்தார். இதை அறிந்த ராஜ்குமார் அபிமானிகள், ஒரு வேனில் வந்தார்கள். அந்த வேனில் எம்.ஜி.ஆரின் படம் ஒட்டப்பட்டிருந்தது. ெ□க்டே வீட்டை விட்டு, எம்.ஜி.ஆர். வெளிவந்த போது, ராஜ் குமார் அபிமானிகள், அவர் கண் முன்பாகவே, வேனில் ஒட்டப் பட்டிருந்த எம்.ஜி.ஆர். படத்தைச் செருப்பால் அடித்து அவமானம் செய்தார்கள். எம்.ஜி.ஆர். ஜிண்டாலுக்குப் புறப்பட்ட போது அவரது காருக்கு முன்னால் தங்கள் வேனை ஓட்டிச் சென்றார்கள். வழி எங்கும் எம்.ஜி.ஆருக்கு எதிராகக் முழக்கம் எழுப்பிக் கொண்டு, படத்துக்கு செருப்பு அர்ச்சனையும் செய்தார்கள்.

தன்னைக் கேவலப் படுத்தி - அவமானம் செய்த ராஜ் குமார் அபிமானிகளுக்குப் பாடம் புகட்ட நினைத்தார் எம்.ஜி.ஆர். ஊட்டியில் நடிகர் ராஜ்குமார் படப் பிடிப்பு நடந்த போது. படப் பிடிப்பில் தமிழர்கள் கலாட்டா செய்தார்கள். படப் பிடிப்பு நடக்க விடாது விரட்டி அடித்தார்கள். அதே சமயம் 40 ஆண்டுகள் சென்னை டிரஸ்ட் புரத்தில் வாழ்ந்து வந்த ராஜ் குமார் வீட்டிலும் கல் வீசி கண்ணாடி, பலகணியை உடைத்தனர். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான், நடிகர் ராஜ்குமார் சென்னையில் உள்ள தன் வீட்டைக் காலி செய்து விட்டு, குடும்ப குழுக்களோடு பெங்களூருக்கு இடம் பெயர்ந்து குடியேறினார்.

- கோகாக் அறிக்கை வழக்குமன்றத்தில் தோற்றுப் போனாலும்,

கர்நாடக அரசு, தமிழர்களையும் - தமிழையும் கருவறுக்கும் வேலையைத் தொடர்ந்து நடத்தியது நடத்தி வருகிறது. தமிழ் பள்ளிகளில், கன்னட மொழியைத் திணித்தது. பல பள்ளிகளில் தமிழ் வகுப்புகளை அகற்றியது. தமிழோசை எழாதபடி ஒழித்துக் கட்டியது.

1978-79 ல் கர்நாடகத்தில் 267 தமிழ் பள்ளிகள் இயங்கி வந்தன. 76,309 மாணவ - மாணவிகள் துவக்கப் பள்ளியிலும், 13,455 மாணவ மணிகள் உயர்நிலைப் பள்ளியிலும் தமிழ் படித்து வந்தார்கள். இன்று நிலை என்ன ? 150 க்கும் மேற்பட்ட தமிழ் பாட வகுப்புகள், பள்ளிகளில் இருந்து நீக்கப் பட்டு விட்டன. தமிழாசிரியர் அமர்த்தங்கள் நிறுத்தப்பட்டுவிட்டன. மைசூர் - மண்டியா - சாமராஜ் நகர் - பெல்லாரி - ெ□ாச பேட்டை, □ பளி, பத்ராவதி, தாவணகரே போன்ற இடங்களில் பெரும்பாலான தமிழ் பள்ளிகளுக்கும்,

வகுப்புகளுக்புக்கும் மூடு விழா நடத்தி விட்டார்கள்.

வள்ளுவர் சிலை :

பெங்களூர் தமிழ்ச் சங்கம் சிலை நிறுவிட, மாநகராட்சி அனுமதியைப் பெற்றது, திறப்பு விழாவுக்கான நாளும் குறித்தது. திறப்பு விழா அன்று கன்னட வெறியர்கள் உயர் நீதி மன்றத்தில் தடை உத்திரவை வாங்கி, திறப்பு விழாவைத் தடுத்தார்கள். சீரமை மிக்க வள்ளுவர் சிலை திறப்பு விழாவை சீர் குலைத்தார்கள்.

வள்ளுவர் சிலையைத் தகர்ப்போம் என்று மாநகராட்சி வளாகத்துக்குள் அணி திரண்டு எக்காள மிட்டார்கள். இந்தக் கலவரப் படைக்குத் தலைமை



படிப்பகம்

www.padippakam.com

வந்தார், பெங்களூர் வந்த எம்.ஜி.ஆர். மரியாதை நிமித்தம் ராமகிருஷ்ண தாங்கியது, ராஜ்குமார் அபிமானிகள் சங்கத் தலைவன் சா.ரா. கோவிந்து, 'ஈ.சஞ்சை' வெங்கடேஷ், சிதானந்த மூர்த்தி, வாட்டாள் நாகராஜ், நாரயான குமார், மாநகராட்சி உறுப்பினர்கள் ராம கௌடா, ராஜண்ணா முதலியோர் பங்கேற்றார்கள்.

மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் தமிழ் உறுப்பினர்கள் பாரி, மற்றும் சக்கரவர்த்தி சிவசங்கர் போன்றவர்கள் வள்ளுவர் சிலை சிக்கலைக் கிளப்பி வாதித்திட்ட போது,கன்னட உறப்பினர்கள் சென்னையில் கன்னடக் கவிஞர் சர்வக்ஞருக்குச் சிலை எடுத்தால்தான் பெங்களூரில் வள்ளுவர் சிலை திறக்க அனுமதிப்போம் என்று விதண்டா வாதம் செய்தார்கள்.

வள்ளுவர் சிலை வைக்கத் தமிழ்ச் சங்கம் முன் வந்தது. ஆனால் சென்னையில் சர்வக்ஞர் சிலை நிறுவிட அங்குள்ள கன்னட சங்கம் ஆர்வம் காட்ட வில்லையே என்று கேள்வி எழுப்பியதும், கன்னட உறுப்பினர்கள் அமைதியானார்கள். வள்ளுவர் சிலை திறக்கப்படாமலே, மூடிக் கிடக்கிறது. நீதி மன்றத் தீர்ப்புக்காக பொறுமை காத்து நிற்கிறது.

தமிழ் புறக்கணிப்பு

பெங்களூர் மாநகராட்சி மன்றம் 60 களில், எல்லா ஆணைகளைம், தமிழிலும் வெளியிட்டு வந்தது. மக்கள் தொகை பட்டியலும், வாக்கு சீட்டும் தமிழ் மொழியிலும் அச்சிட்டு வெளியிட்டது. ஆனால், கடந்த 40 ஆண்டு கால இடைவெளியில், கன்னடர் ஆதிக்கத்தால் மாநகராட்சி மன்ற நிர்வாகத்தில் தமிழ் முற்றாக அழித்து ஒழிக்கப் பட்டது.

அண்மையில் மாநகராட்சி மன்றம் வீட்டு வரி தன் மதிப்பீட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்தது. எதிர்கட்சி உறுப்பினர்கள் இத்திட்டத்தை எதிர்த்தார்கள். தன் மதிப்பீட்டுத் திட்டத்தை விளக்கி எல்லா மொழிகளிலும் துண்டு அறிக்கை வெளியானது. தமிழிலும் அந்தத் துண்டறிக்கை அச்சிடப் பட்டது. இதை அறிந்த கன்னட வெறியர்கள், மாநகராட்சி மன்றத்துக்குள் புகுந்து, தமிழில் எப்படி அச்சிடலாம் என்று கலாட்டா செய்தார்கள். கண்ணாடி, மேசை, நாற்காலிகளை நாசப் படுத்தினார்கள் தமிழில் அச்சிட்ட அறிக்கையை கிழித்து எறிந்தார்கள். தீ வைத்துக் கொளுத்தினார்கள். மேயர் ராமச்சந்திரப்பா, இனி மேல், இப்படிப் பட்ட தவறு நடக்காது : நடக்க இடம் அளிக்க மாட்டேன், என்று உறுதி அளித்த பின்பு தான், கன்னட வெறியர்கள் கலாட்டாவை கை விட்டார்கள்.

- 2001 ல் மக்கள் தொகைக் கணிப்பு நடக்கும் போது மொழி - இன வாரியாக கணக்கு எடுக்க வேண்டும் என்றும், வாக்காளர் பட்டியலும், வாக்குச் சீட்டும் தமிழிலும் அச்சிட வேண்டும் என்றும். கர்நாடக தமிழர் இயக்கம், தேர்தல் ஆணையர் திரு. கில் அவர்கட்கு ஒரு விண்ணப்பத்தை விடுத்தது. ஆணையரும் கவனிப்பதாக பதில் தந்தார். ஆனால் கன்னட செலுவளி நாராயண குமார், இதை எதிர்த்து,



படிப்பகம்

www.padippakam.com

கர்நாடக தேர்தல் ஆணையத்தின் முன் மறியல் ஆர்ப்பாட்டம் செய்தான். மொழி வாரியாக மக்கள் தொகை கணிப்பு நடத்தினால், பல பயங்கரப் பின் விளைவுகளை சந்திக்க வேண்டி வரும்: பெங்களூரில் ரத்த ஆறு ஓடும் என்று கொக்கரித்தான். முதல்வர் கிருஷ்ணாவைச் சந்தித்து, புகார் மனு கொடுத்தான்.

<u>வெங்கடேசன் ஆய்வுக்குழு :</u>

● காவிரிக் கலவரத்தைப் பற்றி விசாரணை நடத்துவதற்காக வெங்கடேஷ் கமிசன் ஆய்வுக்குழு நியமனம் ஆனது. இந்த ஆய்வுக் குழு 1994 ல் தனது அறிக்கையை அரசிடம் கொடுத்தது.

’காவிரிக் கலவரத்துக்கு இந்த அரசோ, எந்தத் தனிப் பட்ட இயக்கங்களோ காரணம் இல்லை: திடீர்க் கலவரம் மூளும் என்று காவல் துறையும் எதிர் பார்க்கவில்லை. அதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க முடியாது போனது’. என்று பூசி மெழுகினாலும், வெங்கடேஷன் ஆய்வுக்குழு சில உருப்படியான பரிந்துரைகளைச் செய்தது.

கலவரத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கால தாமதம் செய்யாமல் உடனே வழங்க வேண்டும். மொழி சிறு பான்மையினர் பற்றிய மக்கள் தொகைக் கணிப்பு இல்லை. ஆகவே மொழி சிறு பான்மையினர் பற்றிய மக்கள் தொகைக் கணக்கு எடுக்க வேண்டும். அவர்கள் மக்கள் தொகைக் கணிப்பு விழுக்காட்டுக்கு ஏற்ப, வாய்ப்பும் - வசதியும் செய்து கொடுக்க வேண்டும். மொழிச் சிறுபான்மையினர் பாதுகாப்பிற்கு, இந்த அரசிடம் எந்த வித உறுதிமொழியும் இல்லை. ஆகவே மொழிச் சிறுபான்மையினர் நலம் பேண தனிச் சட்டம் நிறை வேற்ற வேண்டும்.

இந்த பரிந்துரைகளைக் குப்பைக் கூடையில் தூக்கி வீச வேண்டும் : அமல் படுத்தக் கூடாது என்று கன்னட ஏடுகள் தலையங்கம் தீட்டின. கண்டன அறிக்கைகள் பறந்தன, ஓசைப்படாமல் இந்த பரிந்துரைகளைக் கிடப்பில் போட்டு, இன்று தூசு படிந்து கிடக்கிறது.

இழப் பீட்டுத் தொகையை அடைய, பல தடைகளை தாண்டி, நீதி மன்ற தீர்ப்புக்குப் பின், மூன்று நீதிபதிகள் பாதிக்கப் பட்டவர்களிடம் இருந்து விண்ணப்ப படிவம் சேகரிப்பதாக, கண் துடைப்பு நாடகம் ஆடுகிறது.

<u>காவிரிக் கலவரம் :</u>

தமிழ் நாட்டுக்கு 205 டி.எம்.சி. காவிரி நீர் கர்நாடகம் திறந்து விட வேண்டும் என்று காவிரி நடுவர் மன்றம். இடைக் காலத் தீர்ப்பு வழங்கியது. உடனே அதற்கு எதிர்ப்புக் குரல் கொடுத்து. <u>போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தார்கள் ராஜ்குமார் அபிமானிகள்.</u>

1991, டிசம்பர் 13 ஆம் நாள், கப்பன் பூங்காவில் அப்போதைய முதல்வர் பங்காரப்பாவின் ஆசியுடனும், ஆதரவுடனும், <u>ராஜ்குமார் அபிமானிகள் சங்கத்</u>



படிப்பகம்

www.padippakam.com

தலைவன் சா.ரா.கோவிந்துதான் அந்தக் கூட்டத்தைக் கூட்டினான். எல்லா அரசியல் கட்சிக் கன்னடப் பேராளர்களும் கலந்து கொண்டார்கள். காவிரியில் இருந்து ஒரு சொட்டுத் தண்ணீர் கூட, தமிழ் நாட்டுக்குத் தர மாட்டோம் பச்சை இரத்தம் சிந்திட ஆயிரமாயிரம் கன்னட அபிமானிகள் அணி வகுப்போம் : தண்ணீர் திறந்து விடுவதைத் தடுப்போம். நடுவர் மன்ற தீர்ப்பை ஏற்க மாட்டோம். இனி கர்நாடகத்தில் தமிழனுக்கு இடம் இல்லை மூட்டை முடிச்சுக்களைக் கட்டுங்கள். காட்பாடிக்கு ரயில் ஏறி ஓடுங்கள். போக மறுக்கும் தமிழர்களை அடித்து உதைப்போம், துவம்சம் செய்வோம் என்று கலவரத்தைத் தூண்டும் விதமாக வெறித்தனமாகப் பேசினார்கள்.

தமிழ் நாடு அரசுக்கும், கர்நாடக அரசுக்கும் தொடர்பு உடையது காவிரி நீர் சிக்கல் ! கர்நாடகத் தமிழருக்கும், அதற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. காவிரி நீரை தமிழ் நாட்டுக்குத் திறந்து விடு என்று கர்நாடகத்தில் வாழும் எந்தத் தமிழனும் குரல் கொடுக்க வில்லை. இந்த அடிப்படை அறிவு இல்லாத மரமண்டைகள் போர்ப் பரணி பாடின. இந்த அரை வேக்காடுகளின், ஆவேசப் பேச்சு, காட்டுத் தீ போல் பரவியது. மறுநாள் 13 ஆம் நாள் பெங்களூரில் பெரும் கலவரம் வெடித்தது. தொடர்ந்து மூன்று நாட்கள் தமிழர்களை தடியாலும், சைக்கிள் சங்கிலியாலும், பிளேடுகளினாலும் தாக்கிக் காயப்படுத்தினார்கள் : கத்தியாலும், அரிவாளாலும் குத்திக் கொலை செய்தார்கள். இந்தப் படு கொலையில் 300 தமிழர்கள் உயிரிழந்தார்கள். குடிசைகளுக்குத் தீ வைத்தார்கள். அந்தத் தீயில் பச்சிளம் குழந்தைகளை வீசி எறிந்தார்கள். பெண்களை பாலியல் வன் புணர்ச்சி செய்தார்கள். தமிழர்கள் நடத்தும் தொழிலகங்களை - நிறுவனங்களை - கடைகளை - வீடுகளை - சூறையாடினார்கள் : தமிழர் வாழும் பகுதிகளை பிணக் காடாக்கினார்கள். ரயில் - பேருந்துப் போக்கு வரத்து நிறுத்தப் பட்டன : செய்தித் தொடர்புகள் துண்டிக்கப் பட்டன. கன்னட வெறியர்களை, சமூக விரோதிகளைக் கண்டிக்காமல் - கைது செய்யாமல், அவர்கள் வெறித்தனத்திற்கு தூபம் போடும், விதமாக ஒலி - ஒளி அமைப்புகளும், பத்திரிக்கைகளும், காவல் துறையும் நடந்து கொண்டன. உயிருக்கு அஞ்சி ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் ஏதிலிகளாக - எல்லாவற்றையும் இழந்தவர்களாக, தமிழ் நாட்டுக்கக் குடும்பம் குடும்பமாக, கால்நடையாக நடந்தே புறப்பட்டுச் சென்றார்கள்.

ஏதுமறியா அபலைத் தமிழர்கள் மீது குறி வைத்து, கன்னட வெறியர்கள் நடத்திய அந்த மனித வேட்டையை, கர்நாடகத் தமிழன் என்றென்றும் மறந்து விட மாட்டான். ஆறாத ரணம் அது ! நெஞ்சில் மாறாத வடு அது ! ஆனாலும் அவன் என்றுமே, பழி வாங்க நினைத்தது இல்லை.

பங்காரப்பா வீட்டில் இருந்தும், காந்தி நகரிலுள்ள ராஜ்குமாரின் வஜ்ரேஸ்வரி அலுவலகத்தில் இருந்தும், ராஜ்குமார் அபிமானிகள் சங்கக் கட்டிடத்தில் இருந்தும் தான் கன்னட வெறியர்கள் லாரிகளிலும், வேன்களிலும் அனுப்பி வைக்கப் பட்டார்கள். ராஜ்குமார் அபிமானிகள் சங்கத் தலைவன் சா.ரா.கோவிந்து தான் அந்த நாசகார கும்பல்களுக்கு தீனி போட்டான்.



படிப்பகம்

www.padippakam.com

<u>வீரப்பன் சாகசம் :</u>

காவிரிப் பெரும் கலவரத்தில் வீடு - வாசல் இழந்து, சொத்து - சுகங்களைத் துறந்து குழந்தை - குட்டிகளையும், தள்ளாத முதியவர்களையும் அழைத்துக் கொண்டு ஓராயிரம் குடும்பங்கள் மைசூர் - சாம்ராஜ்நகர் வழியாக தமிழ் நாட்டு எல்லையிலுள்ள சத்தியமங்கலத்துக்கு நடந்தே சென்றார்கள். பசி ஒரு பக்கம், கால் வலி மற்றொரு பக்கம் ! களைத்து - நொந்து நூலாகிப் போன அவர்கள் நல்லூர், ராமாபுரம் ஊர்களில் ஓய் வெடுத்துத் தங்கினார்கள். அவர்களின் பரிதாப நிலை கண்டு. இரக்கம் கொண்ட அந்த ஊரிலுள்ள தமிழர்கள் பசிக்கு உணவும், தவித்த வாய்க்குத் தண்ணீரும் கொடுத்து உதவினார்கள். இதை அறிந்த நல்லூர் - ராமாபுர காவலர்கள் திரண்டு வந்து தடியால் அடித்து - பூட்ஸ் காலால் உதைத்து - துப்பாக்கிக் கட்டையால் நையப் புடைத்து, ஓட ஓட விரட்டியடித்தார்கள் : உதவி செய்த உள்ளூர் மக்களையும் ஈவு - இரக்கமின்றி சித்திரவதை செய்தனர்.

இதைக் கேள்விப் பட்ட வீரப்பன் தாவி வந்தான் : அந்த போலிஸ் நிலையத்தை இடித்துத் தரை மட்டமாக்கினான். ஆறு காவலர்களைச் சுட்டுக் கொன்றான். ஆகவே இதை இணைத்துப் பார்க்கும் போது, வீரப்பனிடம் இயல்பாகவே தமிழ் இரத்தம் ஓடிக் கொண்டிருப்பதையும், அவன் தமிழன் என்பதற்காகவே, கர்நாடகக் காவல் துறை வேட்டை யாடத் துடிக்கிறது என்பதிலும் உண்மை இருக்கலாம் என்று ஊகிக்க இடம் இருக்கிறது. நடிகர் ராஜ்குமார் கடத்தப் பட்ட பின், கன்னட வெறியர்கள் தமிழர்களைக் கடுமையாக பரிகசிப்பதும், வீரப்பன் உருவ பொம்மையை எரித்து கூச்சல் போடுவதும், இதையே உறுதி செய்கிறது.

<u>கன்னட வெறியர் :</u>

தமிழர்களுக்கு எதிராக, கன்னட வெறியர்கள் நடத்தும் போராட்டங்கள் - தாக்குதல்கள் - அநியாயங்கள் அனைத்தும் கன்னட செலுவளி, கன்னட சக்தி கேந்திரா, கிரிஜா சமிதி, ஜாக்ரன் வேதிகே, ஜாக்ருதி சமஸ்தே, கன்னட சேனா, கன்னட ரட்சணாவேதிக, கன்னட பௌகா, விமோச்சனா, மோர்ச்சா என்று பல்வேறு பெயர்களில் பல வித ராட்சச உருவம் எடுத்தாலும், அவைகள் எல்லாமே வெறும் மடற் கட்டு இயக்கங்கள்தான். இந்த ஒவ்வொரு இயக்கங்களுக்குப் பின்னால் - தலைவனுக்குப் பின்னால் நாலு தொண்டர்கள் கிடையாது. இது ஊரறிந்த பகிரங்க உண்மை !

ஆனால், கன்னடப் போராட்டம் - தமிழருக்கு எதிரான கலவரம் என்று குரல் கொடுத்தால் போதும், மஞ்சள் - சிவப்பு வண்ண கன்னடக் கொடியைத் தூக்கிக் கொண்டு ஓடோடி வருபவர்கள் ராஜ்குமார் அபிமானிகளே ! <u>குண்டர்களும் - சமூக பகைவர்களும் ராஜ்குமார் அபிமானிகள்தான்</u>. தமிழர் மீது வெறுப்பை வளர்க்கும் கன்னட வெறியர்களின் புகலிடம் ராஜ்குமார் அபிமானிகள் சங்கம் தான்!

நடிகர் ராஜ்குமார், கன்னட திரை உலகம் தன் கைப் பிடிக்குள்



படிப்பகம்

www.padippakam.com

இருக்க வேண்டும் - தன் ஆதிக்கத்தை விட்டு நழுவிப் போய்விடக் கூடாது என்பதற்காக, கன்னட ரசிகர்களை ஈர்ப்பதற்காக, தனது படங்களில் கன்னடம் கஸ்தூரி, கன்னட நாடே உயர்ந்தது ; பிறந்தால் கன்னட நாட்டில் பிறக்க வேண்டும் ; காவிரி, கன்னடரின் தாய் ! எப்போதும், யாருக்காகவும் கன்னடத்தை விட்டுக் கொடுக்காதே, என்று கருத்துள்ள பாடல்களையும், காட்சிகளையும் அமைத்துக் கொள்வார். கன்னடர்களை உற்சாகப் படுத்துவதாக நினைத்து, உசுப்பி விடுவார். கன்னடவெறியர் பெருகவும் - அவர்களை மனித மிருகங்களாக மாற்றவும், வளரவும், நடிகர் ராஜ்குமாரின் பங்கு பெரியது ! ஆகவே தமிழருக்கு எதிரான, கன்னடர் போராட்டங்களில் - ஆர்ப்பாட்டங்களில் நடிகர் ராஜ்குமாரின் தூண்டுதல் - ஆதரவு - வாழ்த்துக்கள் பின் பலம் இருந்தே வந்துள்ளது. அபிமானிகள் ஆடிய ஆட்டத்தையும் - ஆர்ப்பாட்டத்தையம் கண்டு களித்தாரே தவிர, தமிழர்கள் தரக் குறைவாகத் தாக்கப் பட்ட, எந்த ஒரு சூழ் நிலையிலும், நடிகர் ராஜ்குமார் கண்டித்துப் பேசியது இல்லை : அறிக்கை வெளியிட்டது இல்லை. தன் அபிமானிகளைக் கட்டுப் படுத்தி, புத்திமதி கூறியது இல்லை. வீடு பற்றி எரியும் போது, நீரோ ராஜ்குமார் வீணை மீட்டி, மகிழ்ந்தார்.

ஆகவே தமிழை அழித்து ஒழிப்பதில் கர்நாடக அரசும், தமிழர்களைத் தாக்கி அழிப்பதில் ராஜ்குமார் அபிமானிகளும் தான் முக்கிய பங்காற்றி வருகிறார்கள். இந்தக் கசப்பான உண்மையை சிலரால் ஜீரணிக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் அது தான் உள்ளங்கை நெல்லிக் கனி ! இந்த உண்மையை நம்மில் பலர் இன்னும் புரிந்து கொள்ள விட்டாலும், வீரப்பன் நன்றாகவே தெரிந்து வைத்திருக்கிறான். இப்போது சிந்தித்துப் பாருங்கள், வீரப்பன், நடிகர் ராஜ்குமாரை பிணைக் கைதியாகப் பிடித்து வைத்திருப்பதற்கும், அவன் வைத்துள்ள கோரிக்கைகளுக்கும் ஒரு பொருளும் - தொடர்பும் இருக்கலாம், என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

<u>தட்டிக் கேட்கிறான் :</u>

'தமிழ் மெல்ல இனிச் சாகும்' என்று பாரதி பாடினானே, அந்தப் பாடல் வரியை மெய்ப்பிக்கும் வகையில், கர்நாடக அரசு, கடந்த 40 ஆண்டுகளாக 'ஸ்லோ பாயிசன்' பாய்ச்சி, சிறுகச் சிறுக தமிழை சாகடித்து வருகிறது. 1966 ம் ஆண்டு பெங்களூர் டைரக்டரி வெளியிட்டுள்ளபடி பெங்களூரில் வாழும் தமிழர்கள் 32 விழுக்காடு ! அண்மையில் இந்து - நாளேடு கணிப்பின்படி 42 விழுக்காடு. ஆனாலும், பெங்களூர் மாநகராட்சி மன்றத்தில் தமிழுக்கு இடம் கொடுக்கப் பட்டிருக்கிறதா ? தமிழுக்கு உரிமையும் - கௌரவமும் தரப் படுகிறதா ? சட்ட மன்றத்தில் தமிழில் பேச முடிகிறதா ? வேலை வாய்ப்பில் ஒதுக்கீடு செய்யப் படுகிறதா ? சரியான பிரதி நிதித்துவம் வழங்கப்படுகிறதா ? இவைகளை உரத்த குரலில் கேட்க, ஒரு கொம்பானாவது பிறந்து இருக்கிறானா ? திருவள்ளுவர் சிலையை, தடைகளை தவிடு பொடியாக்கி திறந்திடும் துணிவும் - துணிச்சலும் யாருக்காவது வந்ததா ? கூனிக் குறுகி கும்பிடு போட்டு, அடி தொழுது வாழ்வார்க்கு, அதற்கெல்லாம் நேரம் ஏது ? வாய் நீளம் பேசுவோர் - வக்கணை பேசுவோர் எல்லாம் வாலைச்



படிப்பகம்

www.padippakam.com

சுருட்டிக் கொண்டு, மூலையில் முடங்கி விட்டார்கள்.

இதோ வீரப்பன் தட்டிக் கேட்கிறான் ! எங்கே என் தமிழ் ? எங்கே என் தமிழர், என்று ஆங்காரமாகக் கேட்கிறான். இந்த அரசு அஞ்சி நடுங்குகிறது. தேடித் தேடிக் கோப்புகளை கண்டு பிடிக்கிறது. தூசி தட்டி துருவித் துருவி ஆய்வு செய்கிறது. முதல்வர் கிருஷ்ணா, வீரப்பனுக்கு விளக்கம் அளித்து 450 பக்கங்களில் ஆவணங்களை, நக்கீரன் கோபால் மூலம் அனுப்பி இருக்கிறாராம் ! புலியாகப் பாய்ந்தவர்கள், எலியாகப் பதுங்குகிறார்கள்.

மொழி சிறு பான்மையினருக்கு அரசியல் சட்டம 15A - பிரிவின் படி, எல்லா உரிமைகளும் கொடுத்து வருகிறோம் என்று முதல்வர் கிருஷ்ணா மென்று விழுங்குகிறார். ஆனால், தமிழ் காவலன் தமிழரின் தானைத் தலைவன் என்று அழைக்கப்படும் கலைஞர் கருணாநிதிக்கோ, கர்நாடக அரசு பற்றியோ - கர்நாடகத் தமிழர் பற்றியோ எதுவும் தெரியவில்லை. தெரியாது என்றால், வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்க வேண்டும். அதை விடுத்து, கிருஷ்ணாவுக்குப் பின் பாட்டுப் பாடுகிறார். கர்நாடகத் தமிழரைக் காட்டிக் கொடுக்கிறார், சிறு பான்மை மக்கள், துயர் களையும் தீனதயாளராம், கலைஞர் கருணாநிதி ! கர்நாடகத்தில் வாழும் மொழி சிறுபான்மை தமிழர்களுக்கு நல்லது செய்யா விட்டாலும், கெடுதலாவது செய்யாமல் இருக்கக் கூடாதா ? கர்நாடகத்தில் வாழும் மொழிச் சிறுபான்மை தமிழர்களுக்கு, கர்நாடக அரசு, சகல வசதிகளையும் - வாய்ப்புக் களையும் தாராளமாக வழங்கி உள்ளது என்று கிருஷ்ணாவுக்கு ஒத்து ஊதி, ஒப்புதல் வாக்கு மூலம் அளிக்கிறார். வேலிக்கு ஓணான் சாட்சி !.

இந்த மழுப்பல் எல்லாம் என்னிடம் வேண்டாம் : விரிவான விளக்கம் தேவை என்று வீரப்பன் திரும்ப அனுப்புகிறார். கிருஷ்ணா குறுக்குப் புத்தி சுறு சுறுப் படைகிறது. தங்கவயல் நகராட்சியில் தமிழ் தான் நடை முறையில் உள்ளது. சட்ட மன்ற உறுப்பினர்களாக தமிழர்கள் பதவி வசிக்கின்றார்கள். பெங்களூர் மாநகராட்சி சமீபத்தில் வெளியிட்டு, கன்னட வெறியர்களால் கிழித்து எறியப்பட்ட, வீட்டு வரி தன் மதிப்பீடு பற்றிய துண்டு அறிக்கையையும், தனது 450 பக்க ஆவணத்தில் இணைத்து வீரப்பன் பார்வைக்கு அனுப்பி இருக்கிறாராம் கிருஷ்ணா வீரப்பனை, காரியம் சாதிப்பதற்காக ஏமாற்றலாம். கர்நாடகத் தமிழர்களே ! நம்மை இனியும் ஏமாற்ற இடம் கொடுக்கலமா ? கிருஷ்ணாவும், கருணாநிதியும் நம்மை ஏமாற்றுவதை எதிர்த்து குரல் கொடுக்க, நல்ல சந்தர்ப்பம் - நழுவ விட்டு விடாதீர்கள்.

<u>சிலை விவகாரம் :</u>

வள்ளுவர் சிலைச் சிக்கலில், பெங்களூரில் வள்ளுவர் சிலையும், சென்னையில் சர்வக்ஞர் சிலையும் திறப்பது என்ற முடிவு, கன்னடரின் கோரிக்கைகக்குப் பணிந்து விட்டதாக கொள்ள முடியுமே தவிர, கர்நாடகத் தமிழரின் ஆசையையோ, வீரப்பன் கோரிக்கையையோ, ஏற்றுக் கொண்டதாகவோ ஆகாது. வள்ளுவர் சிலலைய திறக்கத்தான், நான் இனி பெங்களூர் வருவேன்.



படிப்பகம்

www.padippakam.com

இல்லையேல், பெங்களூருக்கு வர மாட்டேன் என்று கன்னியாகுமரியில் கலைஞர் பேசினாராம். அதற்காக, வள்ளுவர் சிலையை பண்ட மாற்றுப் பொருளாக்குவது. அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல ! முதலில் மூடப்பட்ட சிலை திறக்கட்டும். பின்பு நிறுவப்பட்ட வேண்டிய சிலையைப் பற்றி பேசுவோம், என்பதே தன்மானம் !

<u>இரு அரசுகளின் பம்மாத்து :</u>

வீரப்பனின் 14 கோரிக்கைகள் என்னவாக இருந்தாலும், கர்நாடக அரசு 51 தடாக் கைதிகளையும், தமிழ் நாடு அரசு 5 தமிழர் விடுதலைப் படை, மீட்சிப் படை போராளிகளையும் விடுதலை செய்து விட்டால், வீரப்பன் சமாதானம் அடைந்து விடுவான் : நடிகர் ராஜ்குமாரையும், மூன்று சகாக்களையும் விட்டு விடுவான் என்று கணக்குப் போடுகிறார்கள். நக்கீரன் கோபாலும், அந்த நம்பிக்கையுடன் தான் மீண்டும் அரசு தூதராகக் காட்டுக்குள் போயிருக்கிறார். இதில் வெற்றி அடைந்தால். நமக்கு மகிழ்ச்சிதான்.

ஆனால் வீரப்பனின் மற்ற கோரிக்கைகள் என்ன கதியாகும் ? கர்நாடகத்தில் தமிழ் நிர்வாக மொழிகளில் ஒன்றாக ஆக்க வேண்டும் என்பது முதலில் வைத்த கோரிக்கை. இரண்டாவது தடவையில், இரண்டாவது ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும், 205 டி.சி.எம். காவிரி நீர் கொடுக்க வேண்டும் என்பது முதலில் வந்த கோரிக்கை. உலக நாடுகள் நதி வாரிய இரண்டாவது வைத்த கோரிக்கை ! இது பேராசை : முதிர்ச்சி அடையாதவனின் வீண் பிதற்றல் : போகாத ஊருக்கு ஆகாத வழி என்று ஏகடியம் செய்து விடுவதால், சிக்கலுக்குத் தீர்வாக அமைந்து விடாது.

கர்நாடக மக்கள் தொகையில், தமிழரின் எண்ணிக்கை எத்தனை விழுக்காடு என்று கணக்கிட்டு, அரச நிர்வாகங்களில் தமிழுக்கு உரிய மதிப்பும் - மரியாதையும் கொடுப்போம். வேலை வாய்ப்பில் விழுக்காட்டு அடிப்படையில் தமிழருக்கு ஒதுக்கீடு செய்து தருவோம். காவிரி நீர் நடுவர் மன்ற இடைக்கால தீர்ப்பின் படி 205 டி.சி.எம். நீரை எதிர்க்கட்சிகளின் அச்சுறுத்தல்களுக்குப் பணியாது - மழுப்பல் சொல்லாது, எவ்வித தகராறும் பண்ணாது, முறைபபடி திறந்து விடுகிறோம், என்று கிருஷ்ணா உறுதி அளித்தால் வீரப்பனை நம்ப வைக்கலாமோ ? என்னமோ ?

மனித உரிமைக் கழகத்தால் ஏற்படுத்தப் பட்ட சதாசிவம், ஆய்வுக் குழு, தமிழ் நாட்டில் மூன்று அமர்வுகள் நடத்தி உள்ளது. மலை கிராம மக்கள் எப்படி எல்லாம் சீரழிக்கப் பட்டார்கள் : இம்சைக்கு ஆளானார்கள் என்ற கர்நாடகத்தில் சதாசிவம் ஆய்வுக் குழு விசாரணை நடத்தவே கூடாது என்று நீதி மன்றத்தின் மூலம் தடை ஆணை வாங்கப் பட்டுள்ளது. அந்த ஆணை திரும்பப் பெற வேண்டும். சதாசிவம் ஆய்வுக் குழு மீண்டும் வந்து ஆய்வு (விசாரணை) செய்ய வேண்டும். கொடுமைக்கு ஆளான அந்த அபலைகளின் அழு குரல் உலகுக்குத் தெரிய வேண்டும். ஏன் தெரியுமா ? அவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள் ! இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும். அத்து மீறி அயோக்கியத்தனம் செய்த கொடுகையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் கடும் தண்டனை வழங்க வேண்டும். இடி அமீனை விட மிருகத்தனமாக நடந்து கொண்ட சங்கர் பிதிரி,



படிப்பகம்

www.padippakam.com

இங்கு அட்டகாசமாக வாழ்கிறான். அவனது வண்டவாளங்கள் தண்டவாளம் ஏறி, தண்டிக்கப் பட வேண்டும். இந்த வாக்குறுதியை கிருஷ்ணா, வீரப்பனுக்கு திறந்த மனதுடன் அளிக்க வேண்டும். அப்போதாவது வீரப்பன் உண்மையிலே சமாதானம் அடைவானோ ? என்னவோ தெரியாது.

இவைகளைப் புறந் தள்ளிவிட்டு, பம்மாத்து வேலை காட்டி, நடிகர் ராஜ்குமாரை விடுவித்து விடலாம் என்று, கருதினால், ஊமையன் கனவாகி விடும்.

பெங்களூர் சித்திரம் :

நடிகர் ராஜ்குமார், மற்றும் மூன்று பேர் வீரப்பனால் கடத்தப் பட்ட செய்தி கிடைத்ததும், பெங்ளூரில் கலவரம் வெடிக்கும் என்பதை முதல்வர் கிருஷ்ணா, நன்றாக அறிவார். அதனால் தான் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவித்தார். அரசு போக்கு வரத்து வாகனங்களை உடனே நிறுத்தினார். ஆனால் தமிழர்கள் தாக்கப் படுவார்கள் என்பதைத் தெரிந்து இருந்தாலும், தமிழர் பாதுகாப்புக்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்க வில்லை. 144 தடை உத்திரவு கூட பிறப்பிக்க வில்லை ஏன் ? தமிழன் தானே என்ற இளக்காரம்.

பொழுது விடிந்தது : காட்டுத் தீ போல் செய்தி பரவியது. காவலர்களின் பக்க துணையுடன் தமிழர் வீதிகளில் புகுந்து விளையாடினார்கள். நகரமே அல்லோகலப் பட்டது. முதல்வர் கிருஷ்ணா, சென்னைக்குப் பறந்து விட்டார் தமிழர்களைப் பற்றி அவருக்கு என்ன அக்கரை ?

தமிழர்கள் மீது குறி வைத்துத் தாக்கினார்கள். தமிழ் திரைப் படக் கொட்டகைகளை நாசப் படுத்தினார்கள். தமிழ் நாட்டு வாகனங்களை அடித்து, நொறுக்கினார்கள், கடைகளை மூடும் படி, கல்லால் அடித்தார்கள். 4 தமிழ் செய்தித்தாள் அலுவலகங்களைச் சேதப்படுத்தினார்கள், தமிழ் ஒலி-ஒளி பரப்புகளைத் துண்டித்தார்கள். ரயில் போக்கு வரத்துக்கும், செய்தி தொடர்புக்கும் ஊறு விளைவித்தார்கள். மெர்க்கெண்டைல் கூட்டுரவு வங்கி, எம்.வீ.ஜே.குழுமக் கல்லூரிகள் பலவும் பலத்த சேதத்திற்கு உள்ளானது. தமிழர்களை மிகம் கேவலமாக திட்டிக் கொண்டே, வெறி பிடித்த நாய்களாக. ராஜ்குமார் அபிமானிகள் தமிழர்களைக் கண்டு குரைத்தார்கள். சிவகுமார் என்ற இளைஞன் கொலை செய்யப்பட்டான். தமிழனின், வேதனை ஓலம், அரசின் செவியில் கேட்கவே இல்லை.

வீரப்பன் கடத்திச் சென்றான் என்றால், அந்த வீரப்பனுக்கும், பெங்களூரில் வாழும் தமிழனுக்கும் என்ன சம்பந்தம், என்று ஒரு அறிவு கெட்ட கன்னட வெறியனுக்கும் எண்ணிப் பார்க்கும் பக்குவம் இல்லை.

வீரப்பன் ஒரு தமிழன் :

நடிகர் ராஜ்குமார் மீது கை வைத்து விட்டான். அதற்குப் பழிக்குப் பழியாக, இங்குள்ள தமிழன் கையை முறிக்க வேண்டும். இது தான் கன்னட முட்டாள்களின் நெறியாம் - அறமாம். 1982 ம் ஆண்டு மொழிப் போராட்டத்திற்கும், 1991 காவிரிக்



படிப்பகம்

www.padippakam.com

கலவரத்துக்கும் தமிழனை இழுத்துச் சென்றன. ஆனாலும் கன்னடக் காடயர்கள், நடிகர் ராஜ்குமாருக்கு இதனால் ஆபத்து நேர்ந்து விடக் கூடாதே, என்ற அச்சத்தின் காரணமாக, இரண்டே நாளில் தங்கள் ஊழித் தாண்டவத்தை நிறுத்திக் கொண்டார்கள்.

**ஒலி நாடாவின் எதிரொலி :**

ஆனாலும் கன்னடரின் வஞ்சக நெஞ்சம், நீறு பூத்த நெருப்பாகக் குமுறிக் கொண்டு தான் இருக்கிறது. இதற்கிடையில் வீரப்பன் அனுப்பிய ஒலி நாடா வந்து சேர்ந்தது. 10 கோரிக்கைகளை கேட்டதும், ஆத்திரத்தின் உச்சிக்கே சென்றார்கள்.

வீரப்பன், பணம் கேட்பான் ; மன்னிப்புக் கேட்பான், என்று எதிர் பார்த்த ஏமாளிகள், ஏமாற்றம் அடைந்தார்கள். வெட்கம் கெட்ட கன்னட பத்திரிக்கைகள், தங்கள் குறை மதியை மெய்ப்பித்தன. ஆகஸ்ட் 7 ஆம் நாள், வெளியான கன்னட - ஆங்கில நாளேடுகள் - கிழமை ஏடுகள் ஒட்டு மொத்தமாக - சொல்லி வைத்தார் போல - ஒரே செய்தியை ஆவேசமாக வெளியிட்டன.

தமிழுக்கு இடம் வேண்டும் : வள்ளுவர் சிலை திறக்க வேண்டும் : காவிரியில் நீரை விட வேண்டும் என்று வீரப்பன் கேட்பதாகச் சொல்வதே பித்தலாட்டம். அந்த ஒலி நாடா வீரப்பனிட மிருந்து வந்ததே இல்லை. கருணாநிதியால் எழுதப்பட்டு, நக்கீரன் கோபால் மூலம் ஒலிப் பதிவு செய்யப்பட்ட போலியான ஒலிச் சுருள், கன்னடர்களைப் பணிய வைக்க தமிழர்கள் செய்யும் மோசமான தந்திரம் ; மோசடியான சதித் திட்டம்.

வீரப்பன் பெயரைச் சொல்லி, கருணாநிதியும், கோபாலும் கிருஷ்ணாவை பிளாக் மெயில் பண்ணி 5-50 கோடி அல்ல : 100 கோடி ரூபாய்களைப் பறிக்கப் போடும் நாடகம் ! கருணாநிதி யார் தெரியுமா, என்று வினா எழுப்பி, நரகரல் நடையிலே கட்டுக் கதைகள் - நக்கீரன் கோபால் எப்படிப் பட்டவன் தெரியுமா ? பணத்துக்காக எதையும்செய்யத் துணிவும் தீயவன் ; சக இதழாளனையே காட்டிக் கொடுக்கும் கயவன் ; சகுனி ! கோடிக் கணக்கான பணத்தை வீரப்பன், கோபாலிடம் கொடுத்து வைத்துள்ளான். அதை கோபால் பல நிறுவனங்களில் முதலீடு செய்துள்ளார். ஒரு பஸ் முதலாளியும், கருணாநிதியும் அவருக்குப் பங்காளிகள். இந்த முறை கோபால் காட்டுக்குச் சென்றால் வீரப்பன் திருப்பி அனுப்ப மாட்டான். தன் பணத்தைக் கேட்பான் ; கொடுக்க மறுத்தால் அவரையும் பிணைக் கைதியாக்கி விடுவான். இவ்வாறு கருணாநிதியையும், கோபாலையும் எந்த அளவுக்கு தரம் தாழ்த்தி அவமான படுத்த முடியுமோ - கேவலப் படுத்த முடியுமோ அந்த அளவுக்கு, பக்கம் பக்கமாக எழுதிக் குவித்தன.

இதழ்நெறியின் குரல் வளையை நெறித்து பத்தாம் பசலித்தனமாக எழுதி வரும், இந்தப் பொய்ப் பிரச்சாரங்களை இங்குள்ள கழகத் தொண்டர்களும் - தலைவர்களும் படித்த போதும் பொங்கி எழ வில்லை. தமிழ் இதழ்களும் கண்டிக்க வில்லை. அப்படி இருக்கையில், இந்த அவதூறுச் செய்திகளை படிக்கும்



படிப்பகம்

www.padippakam.com

முதல்வர் கிருஷ்ணா, புகாரே இல்லாமல் இந்த இதழ்களின் மீது நடவடிக்கை எடுப்பாரா ? நக்கீரன் செய்தித் தொகுப்பாளராவது, இந்த முறை கேட்டைச் சுட்டிக்காட்டுவார் என்று பார்த்தால், அவரும் ஏன் இருட்டடிப்பு செய்கிறார் என்பது தான் புரியாத புதிராக இருக்கிறது.

கன்னட இதழ்களில் வெளியாகும், இந்த பொய்ச் செய்திகளை வைத்துக் கொண்டுதான் ஜெயலலிதா வீரப்பன் விவகாரத்தில் விடுத்துள்ள அறிக்கை ! ஜெயலலிதாவின் மீது பாய்ந்து குதறும் தமிழ் நாட்டுத் தலைவர்கள், இதற்கு மூல காரணமான கன்னட இதழ்கள் மீது அல்லவா காரி உமிழ்ந்திருக்க வேண்டும். கன்னட இதழ்களின் புனை செய்திகள் கால் முளைத்து கன்னடர் இடையே பயங்கர வதந்திகளைக் கிளப்பி இருக்கின்றன. உள்ளூர ஒரு பதபதப்பையும் - பதட்டத்தையும் உருவாக்கி உள்ளன.

நடிகர் ராஜ்குமார் நலமாகத் திரும்பி வரட்டும். அதுவரை அமைதியாக இருப்போம் பொறுமை காப்போம். அதன் பின் நாம் யார் என்பதை இந்தக் கொங்கருக்கு (தமிழருக்கு) காட்டுவோம். நமது வானுயர உருவத்தைக் காட்டுவோம். தமிழர்களை வீணே விட்டு விட மாட்டோம். துவம்சம் செய்வோம் என்று நம் காது படவே பேசுகிறார்கள், கன்னடர்கள், வீதிகளில், பேருந்துகளில், ஓட்டல்களில், பஸ்களில், கோவில்களில், விழாக்களில், நாலு பேர் கூடும் இடங்களில் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது, தமிழர் வெறுப்பை வெளிப்படையாகவே பேசிக் கொள்கிறார்கள். அறைகூவல் எடுத்துக் கொள்கிறார்கள்.

கிராமப் புறங்களுக்குச் செல்லும் தனியார் வண்டிகளில் 420 கருணாநிதிக்குத் திக்காரா (ஒழிக), புரொக்கர் கோபாலுக்குத திக்காரா ! என்று எழுதி இருக்கிறார்கள்.

விடுதலை நாளை முன்னிட்டு பெங்களூரில் தேசியக்கொடிகள் நிறைய விற்பனையாகும். ஆனால் இந்த முறை தேசியக் கொடிகளை விட, மஞ்சள் - சிவப்பு வண்ணக் கன்னடக் கொடிகளும், ராஜ்குமார் படங்களும் அமோகமாக விற்பனையானது. எதற்காக ? தமிழனைப் பழி தீர்க்க, கன்னடர்கள் தயாராகி விட்டார்கள் : கலவரம் செய்யவும், கிளர்ச்சியை உண்டு பண்ணவும் சித்தமாகி விட்டார்கள். கன்னடக் கொடியை ஏந்திய படியே புறப்பட்டு வரப் போகிறான். தமிழனைப் புரட்டி புரட்டி எடுக்கப் போகிறான். இதனால் தான், வண்டி ஓட்டிகள் ராஜ்குமார் படங்களைப் போட்டி போட்டு வாங்குகிறார்கள். கன்னடரின் தாக்குதலில் இருந்து தங்களையும், தங்கள் உந்துகளையும் தற்காத்துக் கொள்ள, வாகனங்களில் ராஜ்குமார் படங்களை அவசரமாக ஒட்டுகிறார்கள். வேகம் குறைந்து விடக் கூடாது என்றே, இன்று வரை - ராஜ்குமார் விடுதலையாகும் வரை, திரை அரங்குகளை திறக்கக் கூடாது : படங்களைத் திரை யிடக் கூடாது என்று மிரட்டி வருகிறார்கள். கன்னட திரைப்பட வர்த்தக சபையில் தினம் தினம்



படிப்பகம்

www.padippakam.com

கூடிக் கூடி சதித் திட்டம் தீட்டுகிறார்கள். ராஜ்குமார் விடுதலை கால தாமதமானாலும் சரி, விடுவிக்கப் பட்ட பின்னாலும் சரி, இங்குள்ள தமிழர்கள் மற்றொரு கொடூரமான தாக்குதலுக்கு உறுதியாக ஆளாகியே தீர்வார்கள். இன்றைய பெங்களூரின் சூழ்நிலை இது தான்.

எங்கள் வேண்டுகோள் !

இந்த இலட்சணத்தில், கலைஞர் கருணாநிதி, நடிகர் ராஜ்குமாரை விடுவிப்பதில் அதிக பொறுப்போடும் கடமை உணர்வோடும் செயல்படுவதாக, முதல்வர் கிருஷ்ணாவிடம்

பாராட்டுப் பெறுகிறார். நக்கீரன் கோபால், இரு அரசுகளின் தூதுவராகச் சென்று வீரப்பனையும், நடிகர் ராஜ்குமாரையும் சந்தித்து, அவர்களைப் படம் பிடித்து ஒலி - ஒளி நாடாக்களை காட்டி முதல் வெற்றி பெற்று இருக்கிறார். கிருஷ்ணாவுக்குப் பால் வார்த்து இருக்கிறார். நடிகர் ராஜ்குமார் குடும்பத்துக்கு நம்பிக்கை யூட்டி இருக்கிறார். ஆனால் கன்னடர் இடையில் சந்தேகப் பேர்வழிகளாகவே காட்சி தருகிறார்கள்.

நடிகர் ராஜ்குமாரை விடுவிக்கும் பணியை முதல்வர் கிருஷ்ணா எடுத்த எடுப்பிலே கலைஞர் கருணாநிதி மீது சுமத்தி விட்டார். வெற்றி பெற்றால் கிருஷ்ணாவுக்குக் கிரீடம் ! தோல்வி அடைந்தால் தமிழ் நாடு தான் காரணம், என்று சுட்டு விரல் காட்டித் தப்பித்துக் கொள்வார். கலைஞரோ, தன் மீது சுமத்திய பொறுப்பை, நக்கீரன் கோபாலின், தலையில் ஏற்றி விட்டார். எப்படியாவது நடிகர் ராஜ்குமாரை விடுவித்து, கர்நாடக அரசிடம் ஒப்படைக்க வேண்டியது தமிழ் நாட்டின் முழுப் பொறுப்பு !.

கலைஞர் கருணாநிதியும், நக்கீரன் கோபாலும், பக்க துணையாக நடிகர் ரஜினி காந்தும் அதிக அக்கரை காட்டுகிறார்கள். மனித நேய உணர்வோடு ஈடுபடுவதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். அவர்களின் மனித நேய உணர்வை, சரியாக பொருள் விளக்கிக் கொண்ட கன்னடர் - ராஜ்குமார் அபிமானிகள் எத்தனை பேர் ? யாகம் - யக்ஞம் நடத்துகிறார்கள் : பாழடைந்த கோயிலைக் கூட விடாது. பூசை - படையல் செய்கிறார்கள். வழிபாடு புரிகிறார்கள். இவை எல்லாமே ராஜ்குமார், நலமோடு திரும்பி வர வேண்டும் என்பதற்காக ! ஆனால் இரண்டாவது தடவை, காட்டுக்குள் சென்று பயங்கர மரண விளையாட்டில் ஈடுபடும் நக்கீரன் கோபாலை, இரு அரசுகளும், ராஜ்குமார் குடும்பமும், சில நல்ல உள்ளங்களும் வெற்றி வெற்றுத் திரும்ப வேண்டும் என்று வாழ்த்துகின்றதே தவிர கன்னட மக்களுக்கோ, ராஜ்குமார் அபிமானிகளுக்கோ நக்கீரன் கோபாலை வழி அனுப்ப வேண்டிய பண்பு கூட இல்லை !.

கருநாடகாவில் வாழும் தமிழர்களுக்கு எவ்வித பாதிப்பும் வந்துவிடக் கூடாது என்பதற்காகவே, ராஜ்குமார் விடுதலையாவதில் முனைப்புக் காட்டுகிறோம். என்று நக்கீரன் கோபால், கலைஞர் கருணாநிதி, நடிகர் ரஜினிகாந்த் மூவரும் தங்கள் கவலையைப் தெரியப்படுத்துகிறார்கள். இதில் இருந்து தெரிவது, ராஜ்குமார்



படிப்பகம்

www.padippakam.com

விடுவிக்கப் படாவிட்டால், நாய் படும் பாடு நாதியற்ற தமிழன் படுவான், என்பதை அவர்களே அழைப்பு (சமன்) இல்லாமல் படியேறிப் போய், முன் வாக்குமூலம் அளிக்கிறார்கள். ராஜ்குமார் திரும்பி வந்தாலும், வராமல் போனாலும், தமிழர்கள் தாக்கப் படுவதும் - பாதிக்கப் படுவதும் உறுதி என்பது தான் இன்றுள்ள பெங்களூர் சூழ்நிலை !.

கருநாடகத் தமிழர்கள் மீது நல்லெண்ணமும் - கவலையும் கொண்டிருக்கும் கலைஞரும், நக்கீரன் கோபாலும் ராஜ்குமாரை விடுவிப்பதற்கு முன்பு. கர்நாடக அரசிடமும், ராஜ் குமார் அபிமானிகளிடமும் வாக்குறுதி பெற்றாக வேண்டும். வெறும் அனுதாப அறிக்கையால், பிரச்சினைகளைத் தீர்த்து விட முடியாது.

1. தமிழர்கள் மீது வெறுப்பை வளர்க்கும் கன்னட இயக்கங்களை, ராஜ்குமார் அபிமானிகளை, கலவரம் செய்தால், இந்த அரசு இரும்புக் கை கொண்டு அடக்க வேண்டும்.
2. கன்னடருக்கு ஆதரவாக, தமிழரைப் பழி வாங்கும் காவலர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து தண்டிக்க வேண்டும்.
3. 50 ஆண்டுகளாக, தமிழரிடமிருந்து பறிக்கப் பட்ட அவர்களது உரிமைகளை, முறையாகத் திரும்ப வழங்க வேண்டும்.
4. தமிழுக்கு உரிய மதிப்பும் - அதற்குரிய இடமும் அளிக்க வேண்டும்.
5. கன்னடர் - தமிழர் ஒற்றுமைக்கும், ஒத்துழைப்புக்கும் உறவுப் பாலம் அமைக்க வேண்டும்.

இதுவரை செய்த தவறை, இனி செய்யமாட்டோம் என்று கன்னட இயக்கங்கள் - ராஜ் குமார் அபிமானிகள் வெளிப்படையாக மன்னிப்புக் கேட்க வேண்டும். நடிகர் ராஜ் குமாரும் இதற்குப் பொறுப்பேற்று அறிக்கை விட வேண்டும் : தமிழர் மீது வெறுப்பை உமிழும் கன்னடர்களை அடக்க வேண்டும்.

கர்நாடகத் தமிழருக்காக நாங்கள் வடிப்பது நீலிக் கண்ணீரல்ல : இரத்தக் கண்ணீர் என்பது உண்மையானால், எங்கள் வேண்டுகோள்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வற்புறுத்துங்கள். அப்பறம், நடிகர் ராஜ்குமாரை கர்நாடக அரசிடம் ஒப்படையுங்கள்.

☒-☒-☒-☒

கனல் அச்சகம், பெங்களூர் - 38.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# நடிகர் ராஜ்குமார் கடத்தல் - வீரப்பன் கோரிக்கைகள் ஒரு கண்ணோட்டம் !



படிப்பகம்